# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
# CC No.294/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw14/Pw9 |
| Name | : இளங்கோவன் |
| Father/Husband's Name | : கிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.04.2026.

**முதல் விசாரணை:**

நான் வேலூர் போதை நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்ணாகிப்பாளராக பணிபுரிந்து 29.02.2024 ல் பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்போது கடலூரில் வசித்து வருகிறேன். கடந்த 26.09.2015 ம் தேதி நான் மறைமலைநகர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் காமராஜ் என்பவர் முதல் விசாரணை செய்து வைத்திருந்ததை எனது காவல் உதவி ஆய்வாளர் தன்ராஜ் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு விசாரணை செய்து வைத்திருந்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் செங்கல்பட்டு போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சிவகுமார் அவர்களை அணுகி இந்த வழக்கில் விபத்துக்குள்ளான இருசக்கர வாகனம ஹீரோ

ஹோண்டா டியோ பதிவு எண் டி.என்.32 ஏ எப் 1468 என்ற வாகனத்தை ஆய்வு செய்ததற்கான சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த மோட்டார் வாகன சான்று அறிக்கை **அதசா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279 304(எ) இதச வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரியின் கையெழுத்திற்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்பதை குறித்து முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். கைது நமுனாவில் எந்த அதிகாரி கைது செய்திருக்கிறார் என்று எந்த கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்பதை குறித்து முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் கையால் எழுதப்பட்டதாகவும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாகவும் உள்ளது என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சி ராமலிங்கம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் வாக்குமூலம் மட்டும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அதன் கீழ் அந்த வாக்குமூலத்தில் எந்த தேதியல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தேதி குறிப்பிடவில்லை. எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்ற குறியீடும் இல்லை. சாட்சி ராமலிங்கம் போலீசார் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால்

தவறாக சாட்சியம் அளித்துள்ளார். விபத்து வழக்குகளில் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். இந்த வழக்கை புலன் விசாரணை அதிகாரியாகிய நான் சரியாக விசாரிக்காமல் எதிரி மீது தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான குற்றவாளியை தப்பவிட்டு எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu